# கரூர் நகராட்சி
## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2021ம் ஆண்டு செப்டம்பர் 30ம் நாள் வியாழக்கிழமை மாலை 5.15மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற சாதாரண கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திரு.சு.இராமமூர்த்தி அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு .

1)கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட இனாம்கரூர் கிராமம் புல எண்.192/2–ல் அரசு பாறை புறம்போக்கு மொத்த விஸ்தீரணம் ஹெக்டேர்.0.16.0 (0.39 செண்ட்)–ல் ஏர்ஸ் 20 செண்ட் நிலத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டுவதற்கு முன்நுழைவு அனுமதி வழங்கிட கரூர் நகர்மன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றி அதன் நகலினை அனுப்ப கோரி வந்துள்ள வட்டாட்சியர், கரூர் அவர்களின் கடிதம் நாள்.29.09.2021ம் தேதியிட்ட கடிதம் ந.க.எண்.அ4/285/2021 மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மேற்படி இனாம்கரூர் கிராமம் புல எண்.192/2–ல் அரசு பாறை புறம்போக்கு மொத்த விஸ்தீரணம் ஹெக்டேர்.0.16.0 (0.39 செண்ட்)–ல் ஏர்ஸ் 20 செண்ட் நிலத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டுவதற்கு முன்நுழைவு அனுமதி வழங்கிட தடையின்மை சான்று வழங்கலாம்.

(எப்1/9241/2021)

தீர்மானம் எண். 478 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சணப்பிரட்டி கிராமம் புல எண்.1388–ல் அரசு புறம்போக்கு தார்சாலை மொத்த விஸ்தீரணம் ஹெக்டேர்.1.29.5–ல் ஏர்ஸ் நிலத்தில் ஹெக்டேர்.0.04.0–ல் ஏர்ஸ்(0.10 செண்ட்) நிலத்தினை நகர ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டுவதற்கு முன்நுழைவு அனுமதி வழங்கிட கரூர் நகர்மன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றி அதன் நகலினை அனுப்ப கோரி வந்துள்ள வட்டாட்சியர், கரூர் அவர்களின் கடிதம் நாள்.29.09.2021ம் தேதியிட்ட கடிதம் ந.க.எண்.அ4/285/2021 மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மேற்படி சணப்பிரட்டி கிராமம் புல எண்.1388–ல் அரசு புறம்போக்கு தார்சாலை மொத்த விஸ்தீரணம் ஹெக்டேர்.1.29.5–ல் ஏர்ஸ் நிலத்தில் ஹெக்டேர்.0.04.0–ல் ஏர்ஸ்(0.10 செண்ட்) நிலத்தினை நகர ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டுவதற்கு முன்நுழைவு அனுமதி வழங்கிட தடையின்மை சான்று வழங்கலாம். (எப்1/9241/2021)

தீர்மானம் எண். 479 அனுமதிக்கப்பட்டது.

3)கரூர் நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம் – 2020–2021ன் கீழ் 63.05கிலோமீட்டர் நீளத்திற்கு சாலைகளை மேம்படுத்துதல் பணிக்கு (12 சிப்பம்) மதிப்பீட்டுத்தொகை ரூ.2650.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் ந.க.எண்.20557/2020/இ3, நாள்.16.12.2020ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 22.12.2020ல் தலைமை பொறியாளர் சென்னை அவர்களால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 25.01.2021ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 09.02.2021ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| சிறப்பு சாலைகள் திட்ட நிதி தொகை | ரூ.2252.34 இலட்சம் |
| நகராட்சி பங்களிப்பு தொகை | ரூ.397.66 இலட்சம் |
| மொத்தம் | ரூ.2650.00இலட்சம் |

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் 01.09.2021 அன்று மேற்கொள்ளப்பட்ட காணொலி கூட்டத்தில் நகராட்சிகளின் நிதி சுமையை குறைக்கும் நோக்கத்தில், சிறப்பு சாலைகள் திட்டத்தில் துவக்கப்படாத பணிகளை இத்திட்டத்திலிருந்து ரத்து செய்து, அடுத்து வரும் சாலை மேம்பாட்டு திட்டபணிகளில் சேர்த்து மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறப்பு சாலைகள் திட்டப்பணிகளில் கீழ்கண்ட 14 சாலைப்பணிகள் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது.

| வ எண் | வார்டு எண் | சிப்பம் எண் | சாலையின் பெயர் | சாலையின் வகை | நீளம் மீ | தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 1 | திருக்காம்புலியூர் மாரியம்மன் கோவில் ரோடு | BT | 550 | 31.00 |
| 2 | 11 | 3 | சோழன் நகர், பாரதியார் நகர், ஜீவா நகர் (ம) பாலகிருஷ்ணா நகர் | BT | 100 | 55.00 |
| 3 | 31 | 5 | அருணாச்சல நகர் 4வது மற்றும் 4வது தெரு | BT | 600 | 28.00 |
| 4 | 31 | 5 | அருணாச்சல நகர் விஸ்தரிப்பு சாலை | BT | 750 | 35.00 |
| 5 | 31 | 5 | பசுபதிபாளையம் குறுக்கு தெருக்கள் | BT | 300 | 14.00 |
| 6 | 33 | 6 | சிலோன் காலனி சாலை | BT | 210 | 8.00 |
| 7 | 34 | 6 | நல்லப்பா நகர் கிழக்கு மேற்கு சாலை | BT | 300 | 12.00 |
| 8 | 34 | 6 | நல்லப்பா நகர் நடு வீதி | BT | 150 | 6.00 |
| 9 | 34 | 6 | ஆதிதிராவிடர் காலனி | BT | 300 | 12.00 |
| 10 | 35 | 6 | எம்.ஆர்.நகர் சாலை | BT | 350 | 14.00 |
| 11 | 11 | 9 | DHO தெரு, காமாட்சியம்மன் கோவில் தெரு, பிள்ளையார் கோவில் தெரு | CC | 1300 | 38.00 |
| 12 | 14 | 9 | பழனியப்பா தெரு, என்.எஸ்.கே நகர், பழைய போஸ்ட் ஆபிஸ் சாலை | CC | 1450 | 56.00 |
| 13 | 36 | 12 | ஜீ.ஆர் நகர் பிரதான சாலை, 3வது தெரு முதல் 10வது தெரு வரை குறுக்கு சாலைகள் | BT | 1625 | 60.00 |
| 14 | 47 | 12 | அசோக் நகர் பிரதான சாலை மற்றும் குறுக்குச்சாலைகள் | BT | 1645 | 60.00 |
| | மொத்தம் | | | 10.530 கி.மீ., | | ரூ.429.00 லட்சம் |

எனவே சிறப்பு சாலைகள் திட்டத்தில் துவங்கப்படாமல் உள்ள மேற்கண்ட 14 சாலை பணிகள் மதிப்பீட்டுத் தொகை ரூ.429.00 இலட்சத்தை சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021ல் நகராட்சி நிதி பங்களிப்பு தொகையிலிருந்து நீக்கம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நீக்கம் செய்யப்பட்ட சாலை பணிகளை அடுத்து வரும் சாலை மேம்பாட்டு திட்டத்தில் முன்னுரிமை அளித்து பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்பிக்கவும் அனுமதிக்கலாம். (இ1/6033/2020)

தீர்மானம் எண். 480 அனுமதிக்கப்பட்டது.

4) எஸ்.சண்முக சுந்தரம்,அவர்கள் இந்நகராட்சியில் பணிகள் மேற்கொண்டு செய்து முடித்ததில் 2014–2015 முதல் 2017–2018 ஆம் ஆண்டு வரை பட்டியலில் பிடித்தம் செய்துள்ள ASD, FSD தொகையினை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். பணிகளுக்கு தணிக்கை தடை ஏதும் இல்லாததாலும், ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும் மேற்படி தொகைகள் காலம்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் உதவி பொறியாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி தொகை ரூ.4,12,965/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (பி6/6593/2021)

தீர்மானம் எண். 481 அனுமதிக்கப்பட்டது.

5)எஸ்.சண்முக சுந்தரம்,அவர்கள் இந்நகராட்சியில் பணிகள் மேற்கொண்டு செய்து முடித்ததில் 2014–2015 முதல் 2017–2018 ஆம் ஆண்டு வரை பட்டியலில் பிடித்தம் செய்துள்ள ASD, FSD தொகையினை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். பணிகளுக்கு தணிக்கை தடை ஏதும் இல்லாததாலும், ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும் மேற்படி தொகைகள் காலம்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் உதவி பொறியாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி தொகை ரூ.1,71,350/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (பி6/6593/2021)

தீர்மானம் எண். 482 அனுமதிக்கப்பட்டது.

6)டி.சுந்தர்ராஜ், அவர்கள் இந்நகராட்சியில் பணிகள் மேற்கொண்டு செய்து முடித்ததில் 2013–2014 முதல் 2015–2016 ஆம் ஆண்டு வரை பட்டியலில் பிடித்தம் செய்துள்ள ASD, FSD தொகையினை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். பணிகளுக்கு தணிக்கை தடை ஏதும் இல்லாததாலும், ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும் மேற்படி தொகைகள் காலம்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் உதவி பொறியாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி தொகை ரூ.2,00,900/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (பி6/6594/2021)

தீர்மானம் எண். 483 அனுமதிக்கப்பட்டது.

7)எஸ்.சண்முக சுந்தரம்,அவர்கள் இந்நகராட்சியில் பணிகள் மேற்கொண்டு செய்து முடித்ததில் 2014–2015 முதல் 2017–2018 ஆம் ஆண்டு வரை பட்டியலில் பிடித்தம் செய்துள்ள ASD, FSD தொகையினை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். பணிகளுக்கு தணிக்கை தடை ஏதும் இல்லாததாலும், ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும் மேற்படி தொகைகள் காலம்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் உதவி பொறியாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி தொகை ரூ.1,49,084/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (பி6/6594/2021)

தீர்மானம் எண். 484 அனுமதிக்கப்பட்டது.

8)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமானTN47 P0342 Tipper Lorry வாகனத்திற்கு 2021–2022ஆம் ஆண்டு (FC)தகுதிச் சான்று பெற்று இயக்க வேண்டியுள்ளதாலும் மேலும் வாகனத்தின் அவசர அவசியம் கருதி பொது சுகாதாரப்

பணிக்கு வாகனம் தேவை என்பதால், மேற்கண்ட வாகனத்திற்கு பழுதுகள் மற்றும் மராமத்து பணிகள் செய்வதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளிலிருந்து மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00லட்சத்திற்கு மனறத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.2.00 லட்சத்தினை நகராட்சி பொதுநிதிநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்5/8538/2021)

தீர்மானம் எண். 485 அனுமதிக்கப்பட்டது.

9)கரூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவுக்கு சொந்தமானTN47 P0319 Tipper Lorry வாகனத்திற்கு 2021–2022ஆம் ஆண்டு (FC)தகுதிச் சான்று பெற்று இயக்க வேண்டியுள்ளதாலும் மேலும் வாகனத்தின் அவசர அவசியம் கருதி பொது சுகாதாரப் பணிக்கு வாகனம் தேவை என்பதால், மேற்கண்ட வாகனத்திற்கு பழுதுகள் மற்றும் மராமத்து பணிகள் செய்வதற்குஅரசுஅங்கீகாரம் பெற்ற பணிமனைகளிலிருந்து பழுது பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேசசெலவினம் ரூ.2.00லட்சத்திற்கு மனறத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.2.00 லட்சத்தினை நகராட்சி பொதுநிதிநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்5/8536/2021)

தீர்மானம் எண். 486 அனுமதிக்கப்பட்டது.

10)கரூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை 190 தூய்மை பணியாளர்களை கொண்டு அகற்றும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, அவர்களின் கடிதம் ந.க.எண்.KDIS/6093/P3/2018 நாள்.07.04.2018–ன்படி ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனடிப்படையில் 26.06.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்திற்கு கரூர் நகர்மன்ற தீர்மானஎண்.1090 நாள்.10.09.2018–ல் அனுமதி வழங்கப்பட்டு 30.09.2018–ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் உத்திரவு நீட்டிப்பு செய்து பணிநடைபெற்று வருகிறது. மேற்கண்ட நிறுவனத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.2470 நாள்.23.09.2020–ன் படி அனுமதிக்கப்பட்ட உத்திரவு 30.09.2021 அன்றுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் மேற்படிபணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னைஅவர்களுக்கு கருத்துருக்கள் இவவலுவலக கடிதம் ந.க.எண்:எச்1/1853/2020 நாள்:02.08.2021–ல் தேதியிட்ட கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்டு உள்ளது. பொதுசுகாதாரப் பணிஅத்தியாவசிய பணி என்பதாலும் பொதுமக்களின் பொது சுகாதார நலன் கருதியும், திடகழிவு மேலாண்மை விதி 2016–ன்படி திடகழிவுகளை வீடுவீடாக சென்று மக்கும் மற்றும் மக்காத கழிவுகள் என பிரித்து வாங்கப்படும் பணிகள் முக்கியத்துவம் கருதியும், தற்சமயம் பருவமழைக்காலத்தை எதிர் நோக்கி கழிவு நீர் கால்வாய் தூர்வாரி சுத்தம் செய்வதற்கு நடைப்பெற்றுவரும் கூட்டு துப்புரவு பணியின் முக்கியத்துவம் கருதியும் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள

பணி உத்திரவினை. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க ஆகும் காலம் வரைக்கும் பொதுசுகாதாரஅத்தியாவசியஅவசியம் கருதி ஏற்கனவே பணியினை செய்துவரும் M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்தினருக்கே ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்தின் படியும், நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 01.10.2021 முதல் காலநீட்டிப்பு செய்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னைஅவர்களின் அனுமதி பெற்று புதிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் ஆரம்பிக்க காலதாமதம் ஏற்படும் என்பதால் பொது சுகாதார அவசரஅவசியம் கருதி ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்தின் படியும், நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 01.10.2021 முதல் கால நீட்டிப்பு செய்து வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/3280/2018)

தீர்மானம் எண். 487 அனுமதிக்கப்பட்டது.

**11)**கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதி வார்டு எண்.11, வாங்கப்பாளையம் மற்றும் வார்டு எண்.14 விவேகானந்தா தெரு மற்றும் பழைய போஸ்ட் ஆபிஸ் தெருவில் உள்ள சிறுபாலங்கள் மற்றும் மழை நீர் வடிகால் கட்டி பத்து ஆண்டுகளுக்கு மேலாகியுள்ளதால், மிகவும் பழுதடைந்து, பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் செல்ல முடியாத சூழ்நிலையில் இருப்பதால், மேற்கண்ட இடங்களில் புதிதாக மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.13.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.13.00 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 488 அனுமதிக்கப்பட்டது.

12) கரூர் நகராட்சி பகுதியான இனாம் கரூர் மற்றும் கரூர் பகுதிகளில் ( வார்டு எண்.1 முதல் 32 வரை) அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் அரசு காலனியில் ஒரு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையமும் ( STP) ஒரு பிரதான கழிவு நீரேற்று நிலையமும் ( Main Pumping station) இரண்டு இடங்களில் கழிவு நீருந்து நிலையஙகளும் ( Lifting pumping Station )2.97 கி.மீ நீளத்திற்கு நீரேற்றும் பிரதான குழாய்களும், 3013 பாதாள சாக்கடை ஆய்வு குழிகளும், 92.25கி.மீ நீளத்திற்கு பிரதான குழாய்களும் ஆகியவற்றினை ஒரு மாத காலத்திற்கு பராமரிப்பு பணியினை மேற்கொள்ள நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளில் நகராட்சியில் நிதி சேமிப்பு ஏற்படும் நிலையை கருதியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 69, நாள். 04.05.1999–ன் படி ஒப்பந்த அடிப்படையில் ஒரு மாத காலத்திற்கு 03.07.2021 முதல் 02.08.2021 வரை பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சங்கர் ஆனந்த் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்ற தீர்மான எண். 293 நாள். 2.07.2021–ல் ஒப்புதல் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி புதை வடிகால் திட்ட பராமரிப்பு பணிகள் தனியார் மூலம் ஓராண்டுக்கான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று ஒப்பந்த புள்ளியினை இறுதி செய்து பணி உத்தரவு வழங்கிட மேலும் ஒரு மாத காலம் ஆகும் என்பதால் ஏற்கனவே இப் பணியினையே எடுத்துள்ள சங்கர் ஆனந்த் , Infra ஒப்பந்ததாரர் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள விலை விகிதத்திலேயே மேலும் மூன்று மாத காலம் புதை வடிகால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உதவி பொறியாளர் அவாகள் குறிப்பு வழங்கியுள்ளார்.

எனவே 3.10.2021 முதல் 02.01.2022 வரை புதை வடிகால் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு ஏற்கனவே இப் பணியினை எடுத்துள்ள சங்கர் ஆனந்த் Infra . ஒப்பந்ததாரர் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள விலை விகிதத்திலேயே பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ.17,25,,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஏற்கனவே பணி உத்திரவு வழங்கப்பட்ட சங்கர் ஆனந்த் Infra அவர்களின் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதத்திலேயே பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.17,25,000/–நகராட்சி வடிகால் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ5/12700/2015)

தீர்மானம் எண். 489 அனுமதிக்கப்பட்டது.

13)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் 11575 எண்களை பரிட்சார்ந்த முறையில் எதியாத விளக்குகளின் விபரங்களை கண்டறிதல் எரியாத விளக்குகளின் மின் உதிரி பாகங்கள் வழங்கி பணியாளர்கள் மூலம் கம்பத்தில் எரிய வைத்தல் கன்ட்ரோல் சுவிட்சுகள் ON & OFF செய்யும் பணிகள் மேற்கொள்ளுதல் மின்வாரியத்திடம் Line Clearance பணிகள் மறறும் ஒப்பந்தப்புள்ளி காப்பீடு சேமநலநிதி உள்பட அனைத்து பணிகள் வகையினத்திற்கான செலவினங்களுடன் 11575எண்கள் தெருவிளக்குகளை ஒப்பந்த அடிப்படையில் Sankar Anand Infra. Karur தனியார் நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் 2021–2022 பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக ஆணை பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுபபப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரை ஜீலை 2021 மாதத்திற்கு தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகைரூ 9.65 லட்சத்திற்கு 02.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலைவிகிதம் கொடுத்த Sankar Anand Infra. Karur நிறுவனத்திற்கு 3.07.2021 முதல் 02.08.2021 வரை பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 292 நாள். 2.7.2021 அனுமதிக்கப்பட்டு 3.7.2021அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு மாத காலத்திற்கு 4.82021 முதல் 3.09.2021 வரை நகர்மன்ற தீர்மான எண். 323 நாள். 30.07.2021 அனுமதிக்கப்பட்டு 02.08.2021–ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு பராமரிப்பு பணிகள மேற்கொள்ளப்பட்டது. மீண்டும் ஒரு மாத காலத்திற்க 3.2.2021 முதல 2.10.2021 வரை நகர்மன்ற தீர்மான எண். 437 நாள். 31.08.2021 அனுமதிக்கப்பட்டு 02.09.2021 –ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் 2.10.2021அன்று முடிவடைய உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கான நிர்வாக அனுமதி பெறுவதற்கு தாமதமாகின்றது. எனவே தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 2.7.2021 மாத ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் பணியை மேற்கொள்ள ஒப்பந்ததாரர் 26.07.2021 வழங்கியுள்ள ஒப்புதல் கடிதத்தில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலத்தினை நீடிப்பு செய்து வழங்குமாறு தெரிவித்துள்ளதன் படி மேலும் மூன்று மாத காலத்திற்கு 3.10.2021 முதல் 02.01.2021 வரை பணி நீடிப்பு செய்து பணி மேற்கொள்ள அனுமதிக்கும் கூடுதல் செலவினம் ரூ.29.00லட்சத்திற்கு பணி மேற்கொள்ளவும் பணி உத்தரவு வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் பராமரிக்கும் பணி மூன்று மாத காலத்திற்கு 3.10.2020 முதல் 02.01.2022 வரையிலான காலத்திற்கு தெருவிளக்கு பராமரிக்கும் பணியினை 02.07.2021 அன்ற பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்திற்கு பராமரிப்பு பணியினை ஒப்படைக்கவும் அதற்கு ரூ. 29.00 இலட்சத்திற்கு தயார் செய்ய ப்பட்ட மதிப்பீட்டின் படி பணியினை ஒப்பந்ததாரர் Sankar Anand Infra. Karur அவர்களிடம் ஒப்படைத்து பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.29.00 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 490 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி